முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.31/2017**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 15.07.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 15.07.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர். | ராஜேந்திரன் | வயது.. | 66 |
| தந்தை பெயர். | கிருஷ்ணன் | ஊர்.. | பு.கொளக்குடி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனது தகப்பனார் உடன் பிறந்தவர்கள் குப்புசாமி, கொடியான் மற்றும் எனது தந்தை கிருஷ்ணன். மேற்சொன்ன மூவருக்கும் 13.09.1948 பாகப்பிரிவினை நடந்துவிட்டது. பாகப்பத்திரத்தின் படி எனது தந்தைக்கு 82 செண்ட் கிடைத்தது. எனது இரண்டு பெரியப்பாவிற்கும் சமமாக சொத்து கிடைத்தது என்றால் சரிதான். எனது இரண்டு பெரியப்பாவும் பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்தை விற்று விட்டார்கள். எனது தந்தையும் பாகத்தில் கிடைத்த சொத்தை விற்று விட்டார். 5 செண்ட் வீட்டு மனை இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் 5 செண்ட் வீட்டு மனை பற்றி பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அப்பாவிற்கு 1 3/4 செண்ட் வீட்டு மனை பாகத்தில் கிடைத்தது, எனது இரண்டு பெரியப்பாவிற்கும் 3 1/4 செண்ட் கிடைத்தது. ஒரு திருமணம் ஆகாத பெரியப்பாவிற்கு1 3/4 செண்டும், இன்னொரு பெரியப்பாவிற்கு 1 1/4 செண்ட் கிடைத்தது.

2. எனது அப்பாவிற்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த 1 3/4 செண்ட் எங்குள்ளது என்றால் என்னிடம் கொடுக்கவில்லை எனது அனுபவத்தில் இல்லை, எனது பெரிய பெரியப்பா இடம் இருக்கிறது, இன்னொரு பெரியப்பா விற்று விட்டார். எனது பெரியப்பா விற்ற சொத்து என்னிடம் கொடுக்கவில்லை, நான் அனுபவிக்கவில்லை. சின்னபொன்னுவிற்கு எனது அப்பா சொத்து விற்றது தெரியாது. எனது அப்பா சின்னபொன்னுவிற்கு விற்ற சொத்தை கந்தசாமிக்கு

அடைமானம் வைத்தார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. சின்னபொன்னுவிடமிருந்து பிரதிவாதி சொத்தை வாங்கிவிட்ட விபரம் தெரியும். பிரதிவாதி ராமமூர்த்தி 19.5.1982 இல் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். கிரயப்பத்திரம், அடமான பத்திரம் உள்ளிட்ட நகல்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பே நகல்கள் நான் வாங்கி பார்த்தேன் என்றால் சரியல்ல, நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட நகல்களை பார்த்திருக்கிறேன்.

3. பிரதிவாதி பெரிய வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீடு ரூ.40 லட்சம் மதிப்பு இருக்கும் என்றால் தெரியவில்லை. பிரதிவாதி மாடு, டிராக்டர் வைத்திருக்கிறார். சின்னபொன்னு கிரய பத்திரம், அடமான பத்திரம், பிரதிவாதியின் கிரய பத்திர நகல்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் மேற்சொன்ன 3 பத்திரங்களை பற்றிய விபரங்களை பற்றி கூறவில்லை என்றால் சரிதான். சின்னபொன்னு கிரயம் பெற்றதில்இருந்தே சொத்து என்னிடத்தில் இல்லை என்றால் சரிதான் அதற்கு முன்பு என்னிடத்தில் இருந்தது. தாவா சொத்தில் பிரதிவாதி bore போட்டுள்ளார் என்றால் சரியல்ல ஆனால் மின்சார் இணைப்பு இருக்கிறது. வழக்கு 5 செண்ட்டிற்காக போட்டுள்ளேன். அதில் இருந்து ஒரு பகுதியை வழக்கு பரிகாரத்தில் இருந்து நீக்கிவிட்டேன் என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து 5 செண்டிற்கு கிழக்கில் பிரதிவாதி சொத்து உள்ளது. தெற்கிலும் பிரதிவாதி ராமமூர்த்தி சொத்து இருக்கிறது, வடக்கில் மெயில் ரோடு உள்ளது, மேற்கில் மாணிக்கம், கணேசன் சொத்து உள்ளது. வழக்கு சொத்து சக்குபந்தியில் பிராதில் கூறவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். நான் வடபுர தெரு இருப்பதாக கூறவில்லை என்றால் சரியல்ல. சக்குபந்தியை பிராதில் சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது உடன் பிறந்தவர்கள் 3 பேர் லைலா, சாந்தி, அஞ்சம்மாள் என்ற 3 சகோதரிகள் இருக்கிறார்கள். 3 சகோதரிகளை பற்றி பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு பட்டா பிரதிவாதி பெயரில் உள்ளது. ஏற்கனவே குடிசை வீடாக இருந்து தானே புயலுக்கு பிறகு பெரிய வீடு பிரதிவாதி கட்டியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி வீடு கட்டிய விபரத்தை பிராதிலும், சொத்து விபரத்திலும் சொல்லவில்லை.

5. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அறிக்கையை பார்த்தேன். சரியாக உள்ளதா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை

பத்திரம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது பெரியப்பாக்கள் எனது அப்பாவிற்கு முன்பே இறந்துவிட்டார்கள் இரண்டு பெரியப்பாவிற்கும் திருமணம் ஆனது, இரண்டு பெரியப்பாவிற்கும் வாரிசு இல்லை. இரண்டு பெரியப்பாவின் மனைவியும் இறந்துவிட்டார். எனது தந்தை 2001- இல் இறந்தார், எனது தாயார் 2012 இல் இறந்துவிட்டார். 17.8.1970 -இல் எனது அப்பா சொத்தை விற்று விட்டார் என்றாலும் எனக்கு வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருக்கும் போதே கிரயம் கொடுத்துவிட்டதால் தான் எனது தந்தையும் தாயும் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இருவரும் இறந்த பிறகு பேராசை காரணமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு தான் வழக்கு சொத்து பாத்தியம் என்றாலும், அவருக்கு அனுபவ பாத்தியமும் கிடைக்க பெற்றுள்ளது என்றால் சரியல்ல. எனது சகோதிரிகள் தரப்பினர்களாக வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.